# மாலை முரசு

பக்கங்கள் 14

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 04 ஞாயிற்றுக்கிழமை 22.10.2023 அதிர்வு 83


## 6 வயது சிறுவன் பரிதாப மரணம்!

ஏரியின் மதகில் தவறி வீழ்ந்து 6 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

யாத்திரைக்காக அனுராதபுரத்துக்குச் சென்று பெற்றோருடன் ஏரியில் குளித்த அந்தச் சிறுவன் ஏரியின் 04

# தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களுக்கு ஐ.தே.க. மாநாட்டில் அடியோடு ‘வெட்டு’

## உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படவில்லை எனக் கடும் விசனம்



ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாட்டில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களுக்கு உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படாமை கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையில் கொழும்பு சுகத தாச உள் ளக அரங்கில் நேற்று நடைபெற்றது. 04



## ஊடகர்களுக்கு அனுமதி மறுப்பு

(மன்னார் நிருபர்)

மன்னாரில் இன்று காலை ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையில் ஆரம்பமான தேசிய 04

## லெபனானில் இடிபாடுகளில் இருந்து இலங்கைப் பெண்ணின் சடலம் மீட்பு



லெபனானில் கட்டட இடிபாடுகளில் இருந்து இலங்கைப்பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாத்தறையைச் சேர்ந்த ஐ.[illegible]ரம லதா என்ற 65 வயதுடைய பெண்ணின் சடலமே லெபனானில் மீட்கப்பட்டுள்ளது என்று லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. 04

# அரசியல்வாதிகளுக்கு ஹர்த்தால்; மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்

## ‘சிவில் அமைப்புக்களின் ஒன்றியம்’ என்ற பெயரில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் சுவரொட்டிகள்

(கே. வசந்தரூபன்)

வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வடக்கு – கிழக்கில் இடம்பெறும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்தும் வடக்கு – கிழக்கில் கடந்த 20ஆம் திகதி ஹர்த்தால் முன் னெடுக்கப்பட்டது. 04



# முறிகண்டி கோர விபத்தில் தந்தை பலி; மகன் படுகாயம்!

முல்லைத்தீவு, முறிகண்டி, செல்வபுரம் பகுதியில் நேற்று இரவு (21) இடம்பெற்ற கோர விபத்தில் தந்தை சம்பவ இடத்திலேயே பலியானார். மகன் படுகாயமடைந்து வைத்தியசலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் செல்வபுரம் பகுதியை சேர்ந்த கதிரவேலு லட்சுமணன் (47 வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர்கள் இருவரும் நேற்று இரவு 10 மணியளவில் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற நிலையில் அதே திசையில் பயணித்த பாரவூர்தி மோதி விபத்து நேரிட்டது.

விபத்துச் சம்பவத்தை அடுத்துப் பாரவூர்தியின் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவ இடத்துக்கு மாங்குளம் தலைமை பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் விரைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அந்தப் பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

# கைதுக்கு இடையூறு செய்த பெண்ணும் கைதானார்!

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இரு இளைஞர்களை அம்பலாங்கொடை பொலிஸார் அண்மையில் கைது செய்திருந்தனர்.

இதன்போது அங்கு பெண் ஒருவர் பொலிஸ் அதிகாரிகளின் பணிக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

பின்னர், அந்தப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். பெண்ணும் இரு இளைஞர்களும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

19 ஆம் திகதி நள்ளிரவில் அம்பலாங்



கொடை பொலிஸார் இரண்டு பேரைக் கைது செய்தனர். அவர்கள் மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

இருவரும் மதுபோதையில் இருந்ததால், பொலிஸ் அதிகாரிகளால் சம்பவத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் அம்பலாங்கொடையைச் சேர்ந்த 27 மற்றும் 25 வயதுடைய இரு இளைஞர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்டதை அடுத்து பொலிஸ் நிலையத்துக்கு வந்த ஒரு பெண் ஒரவர், பொலிஸ் அதிகாரிகளை மிக மோசமான வார்த்தைகளாலும், கடுமையான வார்த்தைகளாலும்திட்டியுள்ளார்.

எனினும் அந்த பெண்ணை அங்கிருந்து வெளியேற்ற முயன்றபோதும், அவர் செல்லவில்லை.

இதையடுத்து, அந்தப் பெண்ணைக் கைது செய்ய அம்பலாங்கொடை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பின்னரும், இந்தப் பெண் பொலிஸ் அதிகாரிகளுடன் சண்டையிட்டு அவர்களை துன்புறுத்தியுள்ளார், கடித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்கள் மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் வாகன இறக்குமதிக்கு தற்போது சாத்தியங்கள் இல்லை

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கும் சாத்தியங்கள் தற்போதைக்கு கிடையாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக வாகன இறக்குமதிக்கு அரசு கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

எவ்வாறெனினும், தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளும் அண்மையில் தளர்த்தப்பட்டுள்ளன



என்று இராஜாங்க அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் போதியளவு வாகனங்கள் காணப்படுகின்றன என்று துறைசார் நிபுணர்கள் பரிந்துரை செய்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் மற்றும் டொலர் கையிருப்பு போன்ற காரணிகள் தொடர்பில் மதிப்பீடுகளை செய்து அதன் அடிப்படையில் தனியார் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும்.எவ்வாறெனினும் தற்போதைக்கு தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கும் சாத்தியங்கள் கிடையாது என்று அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கப்பல் சேவைகள் மீண்டும் விரைவில்!

இந்தியாவின் தூத்துக்குடி சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டு இடையில் கைவிடப்பட்டது. இந்த நிலையில், தற்போது சிறிய வகுப்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டு நிறுவனங்கள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்துள்ளன.

அந்த நிறுவனங்கள் இலங்கையில் அனுமதி பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி சிதம்பரனார் துறைமுகத்தை மையமாக கொண்டு பல்வேறு இடங்களுக்குக் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்கத் தனியார் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

தூத்துக்குடி – காங்கேசன்துறை, தூத்துக்குடி – கொழும்பு ஆகிய இடங்களுக்கே இந்த சேவைகள் இடம்பெறவுள்ளன.

கடந்த 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை மும்பாயில் நடைபெற்ற சர்வதேச கடல்சார் உச்சி மாநாட்டில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேக்கரி உற்பத்தி விலைகளில் மாற்றங்கள் ஏற்பட மாட்டா!

## பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவிப்பு

பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படாது என சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் மின்சார கட்டணம் எதிர்காலத்தில் மீண்டும் அதிகரிக் கப்படும் பட்சத்தில், பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும், பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகள்அதிகரிக்கப்படவில்லை.

எனினும், தமது துறை பாரிய நெருக் கடியில் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# காசல்ரீ நீர்த் தேக்கப் பகுதியில் மீன் வலையில் மலைப் பாம்பு!

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன், காசல்ரீ நீர்த் தேக்கப் பகுதியில் மீன் வலையில் மலைப் பாம்பு ஒன்று சிக்கியுள்ளது.

காசல்ரீ நீர் தேக்கத்தில் வழமையாக நன்னீர் மீன் பிடிக்கச் சென்றவர்கள் நேற்று மாலை நீர் தேக்கத்தில் வலை யைப் போட்டு விட்டு வந்துள்ளனர்.

இன்று காலை சென்று வழமைப் போல மீன் பிடிக்கும் நபர் வலையை இழுத்துள்ளார். விரிக்கப்பட்ட வலையை இழுக்கும் போது அதிக எடை காணப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அருகில் நின்றவர்களுடன் சேர்ந்து இழுக்கும் போது வலையில் பாரிய மலைப்பாம்பு சிக்கியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றுள்ளனர்.

இதுவரை காலமும் இவ்வாறான ஒரு சம்பவம் நிகழ்ந்ததில்லை எனவும் இதுவே முதல் தடவை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மலைப்பாம்பை நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டனர்.

பின்னர் வலையில் சிக்கிய மலைப் பாம்பு உயிரிழந்திருந்தமை தெரிய வந்துள்ளது.

# 200 கிலோ ஹெரோயினுடன் 5 பேர் கடற்படையினரால் கைது!

200 கிலோ கிராமுக்கும் அதிகளவான ஹெரோயின் போதைப் பொருள்களுடன் 05 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் போதைப் பொருளின் பெறு



மதி 400 கோடி ரூபா என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன் இன்று (22) காலை தொன்றா முனை மீன்பிடி துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் இ.போ.ச. பஸ் மீது மதுபானப் போத்தலால் தாக்குதல்

## காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் வெறியாட்டம்

(வவுனியா நிருபர்)

பராக்கிரமபுர பகுதியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வவுனியா சாலைக்குச் சொந்தமான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மீது மதுபானப் போத்தலால் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா – ஹொரவெப்பொத்தானை வீதியில் பள்ளிவாசலை அண்மித்த பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தால் பஸ்ஸின் கண்ணாடி சேதமடைந்ததுடன் அப் பகுதியூடான போக்குவரத்தும் 30 நிமிடங்களாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைகளை ஆரம்பித்தனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ், முஸ்லிம்...

மாநாட்டில் வரவேற்புரையை கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க ஆற்றினார். மாநாட்டு கூட்ட யோசனைய அறிவித்து பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார உரையாற்றினார்.

அத்துடன் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, தவிசாளர் வஜிர அபேவர்தன, உப தலைவர் அகில விராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க ஆகியோருக்கும் உரையாற்ற நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் வந்த அமைச்சர்களான மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னாண்டோ ஆகியோரும் மாநாட்டில் உரையாற்றினர்.

எனினும், தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் உரையாற்றவில்லை.

வழமையாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக்கூட்டம், மாநாடுகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு உரையாற்ற வாய்ப்பளிக்கப்படும். ஆனால், இந்த மாநாட்டில் நேரம் வழங்கப்பட வில்லை. குறைந்தபட்சம் தமிழ்மொழியில் உரையாற்றக்கூடிய ஒருவருக்காவது வாய்ப்பளித்திருக்கலாம் எனக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

“இலங்கையில் உள்ள அனைத்து இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு பயணிக்கக்கூடிய கட்சிதான் ஐக்கிய தேசியக் கட்சி. அதன் தலைவர் தற்போதைய ஜனாதிபதி முற்போக்கு சிந்தனை உடையவர். அப்படி இருக்கையில் தமிழ் பேசும் உறுப்பினர்களுக்கு உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படாமை வேதனையளிக்கின்றது.” – எனவும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### 6 வயது...

மதகில் தவறி வீழ்ந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கேகாலையைச் சேர்ந்த நிஷான் பமுதித டிஷால் விஜேசிங்க என்ற 6 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி கேகாலையில் இருந்து அனுராதபுரம் விகாரை ஒன்றுக்குச் சென்ற பின்னர் சிறுவன், தாய், தந்தை மற்றும் மூன்று உறவினர்கள் அனுராதபுரத்தில் உள்ள ஏரியில் குளித்துக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

### ஊடகர்களுக்கு...

மீலாதுன் நபி விழாவில் கலந்துகொள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் ,மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ் வருடத்துக்கான தேசிய மீலாதுன் நபி விழா இம்முறை மன்னார் மாவட்டத்தில் இடம்பெறுகின்றது.

முசலி தேசிய பாடசாலையில் விழா ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் முழு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தேசிய மீலாதுன் நபி விழா ஏற்பாடுகள் குறித்து மன்னார் மாவட்டத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்காமல் கொழும்பில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இன்று காலை 9.30 மணியளவில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமான தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்துகொள்ளச் சென்ற பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும், மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஒரு மதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாமை குறித்தும், குறிப்பாக இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் செயற்பாடுகள் குறித்தும் ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காதர் மஸ்தானின் கட்சி சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அரசியல் நிகழ்வு போல் குறித்த தேசிய மீலாதுன் நபி விழா ஜனாதிபதி தலைமையில் இடம்பெறுகின்றது என்றும் ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.






### அரசியல்வாதி...

இந்நிலையில் இந்தக் ஹர்த்தாலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வவு னியா நகரின் பல்வேறு பகுதிகளில் ‘அரசியல்வாதிகளுக்கு ஹர்த்தால் மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள்’ எனும் வசனத்துடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டியின் கீழ்ப் பகுதியில் ‘சிவில் அமைப்புக்களின் ஒன்றியம்’ என உரிமம் கோரப்பட்டுள்ளது.

வவுனியா நகர மத்தி, நூலக வீதி, வைரவப்புளியங்குள வீதி, குருமன்காடு, கந்தசாமி கோயில் வீதி போன்ற வீதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

### லெபனானில்...

இந்தச் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த 17 ஆம் திகதி, பெய்ரூட்டில் உள்ள இலங்கைத் தூதரகம், லெபனானில் குடியிருப்புக் கட்டடம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கிய பல நபர்களில் ஒரு இலங்கைப் பெண்ணும் இருக்கின்றார் என்று தெரிவித்திருந்தது.



# கல்முனையில் இரத்ததானம் இளைஞர், யுவதிகள் பங்கேற்பு

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கல்முனை கல்வி, கலாச்சார மேம்பாட்டு தாபனத்தின் (எக்டோ) நூலகம் ஒழுங்கு செய்திருந்த இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை (22) நூலக வளாகத்தில் இடம்பெற்றது.



தாபனத்தின் தலைவர் எஸ்.எல்.எம். றிஸாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரஹ்மான் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் சி.மருதராஜன் இரத்ததான முகாமை நெறிப்படுத்தியிருந்தார்.இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

கடந்த 20 வருடங்களாக பல்வேறு சமூக நலப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற எக்டோ தாபனம் ஒழுங்கு செய்திருந்த இரண்டாவது இரத்ததான முகாம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனைக் கரையோரம் சிரமதானம் மூலம் துப்புரவு



(எம். எப். நவாஸ் )

முழு வாரமும் சிரமதானம் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை 8 ஆம் பிரிவு கடற்கரை, 11 ஆம் பிரிவு,12 ஆம் பிரிவு மற்றும் 13 ஆம் பிரிவு போன்ற கரையோரப் பகுதிகளை துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் சிரமமான நிகழ்வு (22) மேற்குறிப்பிட்ட பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமை முகாமையாளர் ஏ எம். ஹமீத், ஏனைய முகாமையாளர்களான ரீ. பரமானந்தம், ஐயூ. நபீஷா, கிராம உத்தியோகத்தர் எம். சஜா, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ் . எம். உனைஸ், கருத்திட்ட உதவி உத்தியோதர் எம்.எப்.நவாஸ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர், அத்தோடு விளையாட்டு கழகங்கத்தினர் இணைந்து சிரமதான நிகழ்வை மேற்கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பயனற்ற முயற்சிகள்

அடுத்த ஆண்டு முடிவடைய இருக்கும் தற்போதைய ஜனாதிபதிப் பதவியில் - ஆட்சி அதிகாரத்தில் - அதற்குப் பின்னரும் தொடர்ந்தும் தாம் நீடிக்க வேண்டும் என்ற நப்பாசையில் பகீரதப் பிரயத்தனங்களை பண்ணிக் கொண்டி ருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

அதற்காக அவர் தடுமாறுகின்றார். தெரிபடுகின்ற எல்லாக் கதவுகளையும் தட்டிப் பார்க்கின்றார். எல்லா யோசனைகளையும் அவிழ்த்து விடுகின்றார். அத னைத்தான் அவ்வப்போது அவர் பறக்க விடும் பலூன்கள் என்று இப்பத்தியில் அடிக்கடி குறிப்பிட்டு வருகிறோம்.

ஜனாதிபதி ஆட்சி முறைமையை முடிவுக்குக் கொண்டு வந்து, நாடாளுமன்றுக்குப் பதில் கூற வேண்டிய பிரதமர் ஆட்சி முறையை ஏற்படுத்துவது, தேர்தல் முறையை மாற்றுவது என்று ஏதேனும் ஒரு வாய்ப்புள்ள திட்டத்தை முன்நகர்த்துவதன் மூலம் இந்த இலக்கை - அதிகாரத்தில் தொடர்ந்து நீடிக்கும் வாய்ப்பை - எட்டிவிட முடியாதா என்று அவர் ஆதங்கத்தோடு முயற்சித்து வருகிறார்.

தேர்தல் முறைமையை மாற்றும் யோசனைத் திட்டத்தைக் கூட எப்படி முன்னெடுப்பது என்ற குழப்பத்தில் ஒரே சமயத்தில் பல பாதைகளில் அதற்காக அவர் முயற்சிக்கின்றமை வெளிப் படையானது.

ஒரு புறம் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தமது அரசுத் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்புக்கு அமைய, தேர்தல் முறைமை மாற்றத்துக்கான யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து, அதற்கான முயற்சிகளைத் தம் பாட்டில் முன்னெடுக்கின்றார். நாடாளுமன்றத்திற்கு 160 எம்.பிக்களை தொகுதிவாரியாகவும், எஞ்சியோரை மாவட்ட மற்றும் தேசியப் பட்டியலில் விகிதாசார முறையிலும் தேர்வது பற்றிய திட்டத்தோடு அவர் நகர்கின்றார்.

இன்னொருபுறம் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்ற கட்சிகளின் தலைவர்களை அழைத்து, தேர்தல் சீர்திருத்தத்தை எப்படிச் செய்யலாம், செய்ய வேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆலோசனை நடத்திக் கொண்டி ருக்கிறார்.

இவர்கள் இருவரினதும் முயற்சிக்கு மாறாக, அவர்களுக்குத் தெரியாமல், தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஆராய்ந்து, பரிந்துரைப்பதற்கு ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட விசேட ஆணைக்குழு ஒன்றை முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்பாட்டில் அமைத்து அறிவித்திருக்கிறார்.

ஒரே வேலையை, மூன்று தரப்புகள் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் செய்வதற்கு வழிப் படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் குழப்பநிலை என்கின்றனர் விமர்சகர்கள்.

மொத்தத்தில் அதிகாரத்தில் அடுத்த ஆண்டுக்குப் பின்னரும் நீடிப்பதற்கு ரணில் எடுக்கும் குழப்ப கரமான எத்தனைங்களில் மற்றொரு முயற்சியாக இந்தத் தேர்தல் சீர்திருத்த நடவடிக்கையும் அமைந்து, அதுவும் புஸ்வாணமாகிப் போய்விடும் என்றுதான் தோன்றுகின்றது.





## காரைதீவு சுகாதாரப் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட காரைதீவு 12 ஆம் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய பொருள்களைச் சேகரிக்கும் நிகழ்ச்சி திட்டம் நடைபெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா பஷீர் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பைஸல் முஸ்தபாவின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

காரைதீவு பிரதேச பொது சுகாதார பரிசோதகர் கே.ஜெமீல் , நுளம்பு தடுப்பு உதவியாளர்கள் முஹம்மட் அஸ்பாக், ஜாஹிர்,ஆதிப் ஆகியோரும் காரைதீவு பிரதேச சபை ஊழியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவை அழிக்கப்பட்டன. பொது மக்களுக்கு டெங்கு நுளம்பின் தாக்கம் பற்றியும் விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

## பொத்துவில் ரொட்டை பகுதி விபத்தில் ஒருவர் பலி; இருவர் கவலைக்கிடம்!!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் பிரதான வீதியில் ரொட்டை பகுதியில் நேற்று இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவிலில் இருந்து சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் ஹிஜ்ரா நகரில் இருந்து பொத்துவிலை நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுமே இவ்வாறு நேருக்கு நேராக மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இதே வேளை ஹிஜ்ரா நகரிலிருந்து விவசாய நடவடிக்கைக்காக சென்ற குடும்பஸ்தரே இந்த விபத்தில் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார் என தெரிவிக்கப் படுகிறது.

பொத்துவில் பொலிஸார் விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# அட்டாளைச்சேனையில் யானை தாக்கி ஆசிரிய ஆலோசகர் ஆஸ்பத்திரியில்!

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச் சேனை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் பல்வேறு தேசங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஆசிரிய ஆலோசகர் ஒருவர் யானைத் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் ஒருவர் அட்டாளைச்சேனை சம்புநகர் பிர தேசத்தை நோக்கி அதிகாலை வேளை பயணித்துக் கொண்டிருந்த போது யானை தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார். இந்தச் சம்பவம் அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரிய ஆலோசகர் சம்புக்களப்பு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், காட்டு யானைகள் மூன்று இவரை வழி மறித்தன என்று தெரிவிக் கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இவர் காட்டு யானைகளைக் கண்டு மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்து விட்டு அருகிலிருந்த கால்வாய்க்குள் இறங்கி நின்றுள்ளார்.

ஒரு மணி நேரத்துக்கு மேலாக யானைகளின் நடமாட்டத்தைக் காணாமையால் வீதிக்கு அவர் வந்த வேளையில், மரங்களின் பின்னால் மறைந்து நின்ற யானை அவரைத் தாக்கித் தூக்கி வீசியுள்ளது.

இதனால் பலத்த காயங்களுக்கு அவர் ஆளாகியுள்ளார். இவரது கால் கைகளுக்கும் உடைவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆசிரிய ஆலோசகர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியை அண்டிய பகுதிக்குள் இன்று (22) அதிகாலை 1.30 மணியளவில் உட்புகுந்த காட்டு யானைகள் சில மக்கள் குடியிருப்புப் பகுதிகளின் கட்டடங்கள், சுற்றுமதில்கள், வர்த்தக நிலையங்கள், அசிரி ஆலை போன்ற வற்றைச் சேதப்படுத்தியுள்ளன. பயன் தரும் தாவரங்களையும் நாசப்படுத் தியுள்ளன.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியினை அண்டிய பகுதிக்குள் நுழைந்த காட்டு யானைகள், அரிசி ஆலை ஒன்றினுள் புகுந்து ஆலை இயந்திரங்கள், கட்டடத்தின் சுற்று மதில்கள் போன்றவற்றை சேதப்படுத் தியுள்ளன. இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளது என்று ஆலை உரிமையாளர் தெரிவிக் கின்றார்.

இதேவேளை, பேக்கரி ஒன்றினுள் புகுந்த யானைகள் சுற்று மதில்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளன. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவையும் உடைத்துச் சேதப்படுத்தியுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது.



# கென்யோன் நீர் தேக்கத்தில் துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

(மஸ்கெலியா நிருபர்)

கென்யோன் நீர் தேக்கத்தின் பல இடங்களில் அதிகளவில் குப்பைகள் தேங்கி உள்ளதால் அவற்றை சுத்தம் செய்யும் பணியில் நீர் மின் நிலைய ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இன்று காலை 9 மணி முதல் கென்யோன் நீர் மின் நிலைய ஊழியர்கள் நீர் தேக்க பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். லக்சபான நீர் மின் நிலையத்தின் ஏற்பாட்டில் இந்தத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த சில நாள்களாகப் பெய்து வந்து கனத்த மழை காரணமாக வனப் பகுதியில் உள்ள குப்பைகள் மற்றும் அப் பகுதியில் உள்ள மக்களால் வீசப் படும் குப்பைகளை அகற்றும் பணியில் இன்று கென்யோன் நீர் மின் நிலைய ஊழியர்கள் ஈடுபட்டு வருகின் றனர்.

நீர் தேக்க நீரை வெளியேற்றிய பின் னர் நீர் தேக்க உட் பகுதியில் இருந்த சகல விதமான குப்பைகளும் அகற்றப் பட்டு மீண்டும் நீர் நிரப்பும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

## கல்முனையில் பிடிக்கப்படும் மீன்களை

# வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு இலவசமாக வழங்கும் தொழிலாளி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை, சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக அதிகளவில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இந்த நிலையில் பிரதேசமெங்கும் கடல் மீன்கள் மிகவும் மலிவான விலைக்கு விற்கப்படுகின்றன.

இந்த விலைக்கும் கூட மீனை வாங்கி சமைத்து உட்கொள்ள முடியாமல் உள்ள மக்களுக்கு, தொழிலாளி ஒருவர் இலவசமாக மனிகளை வழங்கி வருகின்றார்.




வளத்தாப்பிட்டி மற்றும் இஸ்மாயில்புரம் ஆகியவற்றில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு கல்முனையைச் சேர்ந்த ஒருவர் மீன்களை கொள்வனவு செய்து தனது டிப்பர் வாகனத்தில் கொண்டு சென்று இலவசமாக வழங்கி வருகின்றார்.

கீரி மீன் கிலோ நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால் மக்கள் அதிகளவில் கொள்வனவு செய்து கருவாடாக்குவதில் கூடிய ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

மழை காலமாக இருப்பதால் விறகு பயன்படுத்தி மீனை கருவாடாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.






# தர்கா நகர் விஸ்டம் பாடசாலை விளையாட்டு விழா நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம் )

தர்கா நகர் விஸ்டம் சர்வதேசப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு ஸதர்கா தர்கா விஸ்டம் சர்வதேசப் பாடசாலையில் அதிபர் மதனி நாஸிம் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக பொறியியலாளர் ஹஸீப் மரிக்கார் மற்றும் விஸ்டம் சர்வதேசப் பாடசாலைகளின் தலைவர் பௌஸர் நளீமி ஆகியோர் கலந்து கொண்டனர்.





# வாணி விழா ஊர்வலம்

( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா முன்பள்ளியின் வருடாந்த கலைவாணி விழா ஊர்வலம் இன்று (22) ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை ஆசிரியைகளான ரம்யா, சனுஜா ஆகியோர் தலைமையில் பெற்றோர்கள் இதனை ஏற்பாடு செய்தனர்.

ஊர்வலத்தின்போது ரமணன், அஜந்தன், தினேஷ்குமார் உள்ளிட்டோர் நீராகாரம் வழங்கினர்.



# மாணவர்களின் இன நல்லிணக்க நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சியில்

(அ.அஸ்வர்)

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் இன நல்லிணக்க நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் நேற்று (21) சனிக்கிழமை காலை நடைபெற்றது.

பொலனறுவை பிரதேசத்தில் சிறுவர் கழகங்களில் தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்கும், கிளிநொச்சியில் அரச கரும மொழி தேர்ச்சிக்கான சிங்கள மொழி கற்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது சிங்கள, தமிழ் பாரம்பரிய முறைப்படி கற்கைநெறி மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

இங்கு சிங்கள தமிழ் பாரம்பரிய உணவுகள் பரிமாறப்பட்டதுடன், பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் போதனாசிரியர்கள், அரச கரும மொழிகள் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சிங்கள தமிழ் கற்கை நெறி பயிலுநர்கள், சிறுவர் கழக ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் ஜனசபா

## அங்குராப்பண நிகழ்வு புதுக்குடியிருப்பில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் கிராமங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் முகமாக ஜனசபா அங்குராப்பண நிகழ்வு நேற்றுக் (21) காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அமைப்புக்களையும் ஏனைய இளைஞர் , யுவதிகளையும் உள்வாங்கி ஜனசபா செயற்குழுவில் 25 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் ஜனசபா செயற்குழு முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல் ஏனைய மாவட்டங்களிலும் செயற்குழு தெரிவு செய்யப்படவுள்ளது.

கிராமங்களில் அதிகமாக போதைவஸ்து கஞ்சா, கசிப்பு காணப்படுவதாகவும், பாடசாலைக்கு மாணவர்கள் வீதிகளின் ஊடாக செல்வதில் அச்சநிலமை, வீதிகள் சீரின்மை, காணி பிரச்சினைகள் தொடர்பாகவும் அரச அதிகாரிகளிடம் பொதுமக்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்ட மேலதிக அரச அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சிவராஜசிங்கம் ஜெயகாந், தேசிய ஜனசபா செயலக அதிகாரிகள், மாவட்ட செயலக பதில் திட்டமிடல் பணிப்பாளர் கணேசமூர்த்தி ஜெயபவானி, புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் வே.மேகானந்தசிவம், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் , பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# நிந்தவூர் அறபா விளையாட்டு கழகத்தால் புற்று நோயாளர் நிலையத்துக்கு உதவி!

**(எம்.எம்.றம்ஸீன்)**

நிந்தவூர் அறபா விளையாட்டு கழகம் அண்மையில் நடத்திய மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கப்பட்ட ஒரு தொகை நிதியை கிழக்கு மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள ஏறாவூர் புற்று நோயாளர் பராமரிப்பு நிலையத்தின் பராமரிப்பு தேவைக்காக அன்பளிப்புச் செய்துள்ளது என்று அறபா விளையாட்டுக் கழகத்தின் சமூக சேவை பிரிவின் தலைவர் ஏ.எல். முபீன் தெரிவித்தார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை நிந் தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட மின்னொளியிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் போது விளையாட்டு கழகத்தின் சமூக சேவைப் பிரிவினரின் அயராத முயற்சியால் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் நிதி சேகரிப்பு உண்டியல் மூலமான நிதி சேகரிக்கப்பட்டது. நன்கொடை செய்வதற்கான வேண்டுகோளும் விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிந்தவூர் பிரதேச பொது மக்கள் உட்பட வெளியூர்களில் இருந்து வருகை தந்த பார்வையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் நிதி உதவி கிடைக்கப் பெற்றிருந்தது என்று தெரிவித்துள்ளார்.





# மோட்டர் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவைகள் மட்டக்களப்பில்

**(பழுவூரான்)**

மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் விசேட நடமாடும் சேவை நேற்று சனிக்கிழமை (21) மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.



மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், பெருந் தெருக்கள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் விசேடமாக அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்களுக்கான உரிமை மாற்றம் செய்வதற்கான விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கான உரிமை மாற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.






# 150 வருடங்களுக்கு பின்னர் பாலர் பாடசாலை புனரமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மாவட்டம், ஒந்தாச்சி மடம் பிரதேசத்தில் 150 வருடங்களுக்கு மேலாக இயங்கிவருவதாக கூறப்படும் பாரதி பாலர் பாடசாலையை மீள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஒந்தாச்சிமடம் விளையாட்டு கழகம் மற்றும் சமூக நலன் விரும்பிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இணைந்த கரங்கள் அமைப்பால் புனரமைப்பு செய்யப்பட்டு அதிபர் திருமதி.வி. அமிர்தகலா தலைமையில் கையளிக்கப்பட்டது.

இணைந்த கரங்கள் அமைப்பின் கொடையாளர்களான கனகராஜ் நடராசமணி குடும்பம், தினேஸ்ராஜ் ஜனபாலசந்திரன் குடும்பத்தினரின் நிதி உதவியுடனும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறவுகளின் நிதி உதவியுடனும் புனரமைக்கப்பட்டு, மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக செயட்பாட்டாளர் ந. கனகராஜ் கலந்துகொண்டார்.

பகுதி கிராம சேவக உத்தியோகத்தர் க. சுரேஸ், ஒந்தாச்சிமடம் விளையாட்டுக் கழக தலைவர் ச.சிரஞ்ஜிவி, கழக உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலையின் அதிபர், ஆலயபரிபாலன சபை பிரதிநிதிகள், கிராம சமூக சேவையாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான ந.கனராஜ், லோ.கஜரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# போரதீவுப்பற்று செயலகத்தில் இடம்பெற்ற வாணி விழா!

(பழுவூரான்)

நவராத்திரியை முன்னிட்டு போரதீவுப் பற்று பிரதேச செயலகத்தின் வாணி விழா நிகழ்வு வெள்ளிக்கிழமை (20) அலுவலக வளாகத்தில் பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதனின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது விசேட பூசை வழிபாடுகளும், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. கலை நிகழ்வுகளில் ஈடுபட்ட சிறார்களுக்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. அத்தோடு உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனனால் வாணி விழா சம்பந்தமான சொற்பொழிவு ஆற்றப்பட் டது.பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ச.சசிகுமார், பிர தேச செயலக கணக்காளர் தி.அம்பிகாபதி, நிர்வாக உத்தியோகத்தர் தி.உமாபதி உள்ளிட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் வாகனத் தரிப்பிடம் திறந்துவைப்பு

(சியாத். எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை குழுவின் கோரிக்கையை ஏற்று, கட்டாரில் வசிக்கும் அக்கரைப்பற்றை சேர்ந்த பிராஸ் காஸிம் நிதியுதவியில் புதிதாக மேம்படுத்தப்பட்ட ஆதார வைத்தியசாலையின் முன்னால் உள்ள வாகன தரிப்பிடம் வெள்ளிக்கிழமை (20) மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர். ரீ.ஆர்.றஜாப், மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி, போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் வைத்தியசாலை குழு உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதியுதவி வழங்கிய பிராஸ் காஸிமுக்கும் இத் திட்டத்தை இலாப நோக்கற்ற முறையில் மிகவும் சிறப்பாக செய்து முடித்த அக்கரைப்பற்றின் முன்னணி நிறுவன உரிமையாளர் இஃதாருக்கும் வைத்தியசாலை குழு நன்றி தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் My Dream Academy

## சந்தோஷ் நாராயணனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது; மாணவர்களுக்கு இலவசமாகக் கணனி கற்கை நெறிகள்









**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ் மாவட்ட கல்வித்தரத்தை மேம்படுத்தி "மீண்டும் கல்வியில் முதலிடம்" என்ற இலக்கை எட்டும் நோக்கில் My Dream Academy தனது பயணத்தை இன்று முதல் ஆரம்பித்துள்ளது.

இதன் அங்கமாக, யாழ். மாவட்ட மாணவர்கள், இளைஞர்களின் கணினி அறிவை வளர்க்கும் முகமாக முற்றிலும் இலவசமான ஊழனைபெ கற்கை நெறியின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாகத் தென்னிந்திய பிரபல இசையமைப்பாளரும் பாடகருமான சந்தோஷ் நாராயணன், அவரின் பாரியார் மீனாட்சி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டு கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்தனர்.

சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபையின் ஆணையாளர் த.இ.த.ஜெயசீலன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான அறிவுரைகளை வழங்கியிருந்தார்கள்.

இந்தக் கற்கைநெறிகளை யாழ். மாவட்டத்தில் வழங்குவதற்காக அங்கஜன் இராமநாதனின் "என் கனவு யாழ்" அறக்கட்டளையுடன் நாடாளுமன்ற உறுப்பினர் தம்பிக்க பெரேராவின் டிபி எடியுகேசன் அறக்கட்டளை கைகோர்த்துள்ளது.

இதனூடாகக் கணினி கற்கையை இலவசமாக இளையோருக்கு வழங்குவதற்காக "டிபி ஐடி கம்பஸ்" எனும் கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட சுமார் 1,200 மாணவர்கள் வருடாந்தம் பயன்பெறும் வகையில் மாவட்டத்தின் முதலாவது My Dream Academy ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறியானது, Code.org, Thunkable, Microbit, Pictoblox, Glitch உள்ளிட்ட தளங்களோடு இணைந்து உருவாக்கப்பட்ட தரம் வாய்ந்த 300 இற்கும் மேற்பட்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் ஒவ்வொரு 8 பாடத்திட்டங்களையும் நிறைவு செய்யும்போது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

இக்கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு, இலங்கையின் மொரட்டுவை பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்படும் கற்கைநெறிகளைத் தொடரும் வாய்ப்புகள் இதனூடாக வழங்கப்படவுள்ளன.

நாடு முழுவதும் அடுத்தாண்டுக்குள் 10 இலட்சம் மென்பொருள் பொறியியலாளர்களை உருவாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாக ஒவ்வொரு மாணவரும் 25 இலட்சம் ரூபா பெறுமதியான இந்தக் கற்றைநெறியை முற்றிலும் இலவசமாகத் தொடரவுள்ளார்கள்.

மீண்டும் கல்வியில் முதலிடம் என்ற எமது இலக்கை நோக்கிய பயணத்தின் மிக முக்கியமான தடமாக யாழ். மாவட்ட மாணவர்களைத் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சியடைந்தவர்களாக உருவாக்கி அதனூடாக சர்வதேச தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் My Dream Academy செயற்படவுள்ளது.

# மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் பரிசோதனை வெற்றி



மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் முதல்கட்ட சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நேற்று மேற்கொள்ளப்பட்டது. ஆளில்லா விண்கலம் டிவி-டி1 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தி, மீண்டும் பத்திரமாக கடலில் இறக்கப்பட்டது

ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தீவிரம் காட்டிவருகிறது.

ககன்யான் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 3 விண்வெளி வீரர்கள் விண்கலம் மூலம் தரையில் இருந்து 400 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சுற்றுவட்டப் பாதைக்கு அனுப்பப்பட உள்ளனர்.

அங்கிருந்தபடியே 3 நாட்கள் ஆய்வு மேற்கொண்டு, பின்னர் மீண்டும் அவர்கள் பூமிக்கு பத்திரமாக திரும்ப அழைத்து வருவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கிடையே விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி மீண்டும் அழைத்து வருவது சவாலான பணியாகும். இதில் விண்கலத்தை எதிர்பாராத ஆபத்துகளில் இருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். இதற்காக பல்வேறுகட்ட பரிசோதனைகள் நடத்துவதற்கு இஸ்ரோ திட்டமிட்டது.

ஏற்கெனவே விண்கலம் கீழிறங்கும்போது பாராசூட்கள் விரிதல் போன்ற சிறிய அளவிலான சோதனைகள் இஸ்ரோவால் நடத்தப்பட்டது.

தொடர்ந்து மனிதர்களை சுமந்து செல்லும் ஆளில்லாத விண்கலத்தை 4 முறை விண்ணுக்கு அனுப்பி பத்திரமாக பூமிக்கு கொண்டுவரும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

அதன்படி முதல்கட்டமாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து டி.வி.-டி1 ராக்கெட் மூலம் ஆளில்லா மாதிரி விண்கலம் விண்ணில் நேற்று செலுத்தப்பட்டது. தரையில் இருந்து 11.6 கிலோ மீற்றர் உயரம் சென்றதும் ராக்கெட்டில் இருந்து விண்கலம் தனியாக விடுவிக்கப்பட்டது. அதன்பின் 16.7 கிலோ மீற்றர் உயரம் எட்டியதும் விண்கலம் தரையிறங்குவதற்கான செயல்பாடுகள் தொடங்கின. அப்போது மணிக்கு 1,470 கிலோ மீற்றர் வேகத்தில் விண்கலம் பூமியை நோக்கி வந்தது.

இதையடுத்து விண்கலத்தில் உள்ள 10 பாராசூட்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிந்து அதன் வேகம் படிப் படியாக குறைக்கப்பட்டது. இறுதியாக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வங்கக்கடல் பகுதியில் விநாடிக்கு 8 மீட்டர் வேகத்தில் விண்கலம் வெற்றிகரமாக இறக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக சுமார் 10 நிமிடங்களில் இந்த பணிகள் முடிந்துவிட்டன.

விண்வெளிக்கு வீரர்களை அனுப்ப உள்ள திட்டத்தின் ஏதேனும் ஒரு சூழலில் விண்கலம் கட்டுப்பாட்டை இழந்தால் அதிலுள்ள வீரர்களை பாதுகாப்பாக மீட்க ஏதுவாக இத்தகைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் சிலர் கூறும்போது, விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பும்போது எதிர்பாராத ஆபத்துகள் நேரலாம். அப்போது விண்கலத்தை பாதுகாப்பாக கடற்பரப்பில் விழச் செய்வதே இந்த சோதனைகளின் நோக்கமாகும். அதில் முதல்கட்ட சோதனை வெற்றி பெற்றுள்ளது.

இதையடுத்து மீட்கப்பட்ட விண்கலத்தை ஆய்வு செய்து அதிலுள்ள பாராசூட்கள் மற்றும் பிற தொழில்நுட்ப அம்சங்களின் செயல்பாடுகள் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டத்தை செயல்படுத்த இன்னும் 2 ஆண்டுகள் உள்ளன.

அதற்குள் பலவிதமான சோதனைகள் மேற்கொள்ளப்படும். அவற்றில் அவசர கால பாதுகாப்பு வசதிகள், விண்வெளியின் புறச்சூழல் பாதிப்பு மற்றும் கதிர்வீச்சு அபாயங்களை எதிர்கொள்ளுதல் உள்ளிட்ட அம்சங்கள் பரிசோதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

ககன்யான் திட்டத்தின் முதல்கட்ட சோதனை வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி, தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், இந்தியாவின் ககன்யான் திட்டத்தை நனவாக்க இந்த சோதனை திட்டத்தின் வெற்றியானது நம்மை ஒரு படி முன்னோக்கி நகர்த்திச் செல்கிறது. இஸ்ரோவில் உள்ள நமது விஞ்ஞானிகளுக்கு எனது வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய எல்லையில் சீன ஆதிக்கம் அதிகரிப்பு!

இந்தியா உடனான எல்லைப் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை சீனா தொடர்ந்து அதிகரித்து வருகிறது என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

இதுகுறித்து பென்டகன் வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையில், போர்களை எதிர்த்துப் போராடி வெற்றிபெறும் திறனை சீனா வலுப்படுத்தி வருகிறது என குறிப்பிட்டுள்ளது.

2049 ஆம் ஆண்டுக்குள் உலகத்தரம் வாய்ந்த இராணுவத்தை உருவாக்குவதே சீனாவின் இலக்கு என்றும் பென்டகனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்திய, சீன எல்லையில் உள்ள டோக்லாம் அருகே நிலத்தடி சேமிப்பு வசதிகள், புதிய சாலைகள், பூட்டானின் சர்ச்சைக்குரிய பகுதிகளில் புதிய கிராமங்களையும் சீனா உருவாக்கி வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாங்காங் ஏரியின் மீது இரண்டாவது பாலம் மற்றும் இரட்டைப் பாலம் மற்றும் விமானத் தளங்களையும் சீனா கட்டமைத்து வருகிறது என்றும் பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

# தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தும் இஸ்ரேல்: ஏவுகணை தடுப்புகளை அனுப்பும் அமெரிக்கா



இஸ்ரேல் – ஹமாஸ் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்துவருகிறது. இந்த நிலையில் அமெரிக்கா தனது மிகவும் சக்திவாய்ந்த 'தாட்' எனப்படும் ஏவுகணை உள்ளிட்ட வான்வழித் தாக்குதல் தடுப்பு அமைப்பை அனுப்பிவைக்கிறது.

ஏற்கெனவே, இஸ்ரேல் இராணுவ வீரர்களுடன் அமெரிக்க இராணுவத்தின் டெல்டா படையும் காசாவுக்குள் நுழைய இருப்பதாக தகவல்கள் வெளியாகின.

இந்தச் சூழலில் தாட், பேட்ரியாட் போன்ற ஏவுகணைத் தடுப்பு அமைப்புக்களை அமெரிக்கா அனுப்புகிறது. பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஈரான், குவைத், லெபனான், சிரியா எனப் பல நாடுகள் செயல்படத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் அமெரிக்க உதவிகள் இஸ்ரேலுக்கு நீண்டு கொண்டே இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி பைடன் இஸ்ரேல் சென்றபோது டெல்டா படை வீரர்களை சந்தித்துப் பேசினார். அமெரிக்க இராணுவத்தின் டெல்டா வீரர் கள் ஆப்கானிஸ்தான், இராக், குவைத், சிரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ரகசிய இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளனர்.

இதேபோல் பாலஸ்தீனத்தின் காசா பகுதியிலும் ஹமாஸ் தீவிரவாதிகளை அழிக்கும் ரகசிய நடவடிக்கையில் டெல்டா படை வீரர்கள் ஈடுபட உள்ளனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன. சுமார் 13 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் இஸ்ரேலில் முகாமிட்டிருக்கின்றனர் என கூறப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தினர். 2 மணி நேரத்தில் இஸ்ரேலை நோக்கிப் பாய்ந்த ஏவுகணைகளில் பலர் உயிரிழந்தனர். இதனை சற்றும் எதிர்பார்க்காத இஸ்ரேல் சில மணி நேரங்களில் பதில் தாக்குதலைத் தொடங்கியது.

இன்று 16 ஆவது நாளாக இஸ்ரேல் தீவிர தாக்கு தலை நடத்தி வருகிறது. காசாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4500 ஐ கடந்துள்ளது. நேற்றிரவு இரவு இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் 55 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அண்டை நாடான சிரியாவின் டமஸ்கஸ் மற்றும் அலெப்போ நகர விமான நிலையங்களைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் சிரிய விமான நிலைய ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலால் அங்கு விமான சேவை தடைபட்டுள்ளது.

வடக்கு காசாவில் நேற்றிரவு இஸ்ரேலியப் படைகள் தாக்குதலைத் தீவிரப்படுத்தின.

இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மைரல் டேனியல் ஹகாரி, காசாவாசிகள் விரைவில் வடக்கை காலி செய்து தெற்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்று எச்சரித்தார்.

இந்த நிலையில் அங்கு தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேல் தாக்குதலால் காசாவில் உள்ள 40 சதவீத கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இவற்றில் பல முற்றிலுமாக தரைமட்டமாகியுள்ளன.

# மூன்றாம் உலகப்போர் ஏற்படும்: பாதுகாப்பு துறை நிபுணர் எச்சரிக்கை

இஸ்ரேல், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையிலான போரால் மூன்றாம் உலகப்போர் மூளும் அபாயம் உள்ளது என்று பாதுகாப்புத் துறை நிபுணர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து பாதுகாப்பு சார்ந்த செய்திகளை வெளியிடும் யுரேசியா குரூப் நிறுவனர் இயான் பிரேமர் கருத்து தெரிவிக்கையில்,

இஸ்ரேல் இராணுவம், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே போர் நடைபெற்று வருகிறது. காசா பகுதிமக்களுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலுக்கு எதிராக நேரடியாக போர் தொடுக்க வாய்ப்பிருக்கிறது.

சுமார் ஒரு லட்சம் வீரர்கள், 2 லட்சம் அதிநவீன ஏவுகணைகள், ஏராளமான பீரங்கிகளை கொண்ட ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் நேரடியாக போரில் இறங்கினால் பாதிப்புகள் அதிகமாக இருக்கும். இஸ்ரேல் இராணுவம் தரைவழி தாக்குதலை தொடங்கினால் முஸ்லிம் நாடுகளில் கொந்தளிப்பு ஏற்படும். பாலஸ்தீன மக்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்கு ஆதரவாகவும் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் குரல் எழுப்பி வருகின்றன.

இதே சூழல் நீடித்தால் அமெரிக்கா தலைமையில் ஓரணியும் ரஷ்யா, சீனா தலைமையில் எதிரணியும் போரில் களமிறங்க வாய்ப்பிருக்கிறது. எனவே, இஸ்ரேல்- ஹமாஸ் இடையிலான போர் 3 ஆம் உலகப்போராக மாறக்கூடிய ஆபத்து அதிகம் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.